# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 50

வகுப்பு - ஏழு - ________

நேரம்: 2மணி

| | |
|---|---|
| பள்ளியின் பெயர்: ____________ | மாணவன்/மாணவி பெயர்: ____________ |
| இடம்: ____________ | வரிசை எண்: ____________ |

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** $10 \times 1 = 10$

1. புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது ____________
   அ) காற்று ஆ) நாவாய் இ) கடல் ஈ) மணல்
2. தூண் என்னும் பொருள் தரும் சொல் ____________
   அ) ஞெகிழி ஆ) சென்னி இ) ஏணி ஈ) மதலை
3. கடலில் துறை அறியாமல் கலங்குவன ____________
   அ) மீன்கள் ஆ) மரக்கலங்கள் இ) தூண்கள் ஈ) மாடங்கள்
4. மக்கள் ____________ ஏறி வெளிநாடுகளுக்குச் சென்றனர்.
   அ) கடலில் ஆ) காற்றில் இ) கழனியில் ஈ) வங்கத்தில்
5. வடமொழி என்று அழைக்கப்படும் மொழி ____________
   அ) மலையாளம் ஆ) கன்னடம் இ) சமஸ்கிருதம் ஈ) தெலுங்கு
6. தொல்காப்பியம் கடற்பயணத்தை ____________ வழக்கம் என்று கூறுகிறது.
   அ) நன்னீர் ஆ) தண்ணீர் இ) முந்நீர் ஈ) கண்ணீர்
7. எதுகை இடம்பெறாத இணை ____________
   அ) இரவு - இயற்கை ஆ) வங்கம் - சங்கம்
   இ) உலகு - புலவு ஈ) அசைவு - இசைவு
8. 'உரவுநீர் <u>அழுவம்</u>' - இத்தொடரில் அடிகோடிட்ட சொல்லின் பொருள் ____________
   அ) காற்று ஆ) வானம் இ) கடல் ஈ) மலை
9. வேயாமாடம் எனப்படுவது ____________
   அ) வைக்கோல் வேயப்படுவது ஆ) சாந்தினால் பூசப்படுவது
   இ) ஓலையால் வேயப்படுவது ஈ) துணியால் மூடப்படுவது
10. தமிழர்கள் சிறிய நீர்நிலைகளைக் கடக்க பயன்படுத்தியது ____________
    அ) கலம் ஆ) வங்கம் இ) நாவாய் ஈ) ஓடம்

**II. மனப்பாடப் பாடல்** $1 \times 4 = 4$

11. 'கலங்கரை விளக்கம்' பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** $5 \times 2 = 10$

12. மண், பொன் என்பவை எவ்வகைச் சொற்கள்?
13. மரக்கலங்களைத் துறை நோக்கி அழைப்பது எது?
14. தோணி என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தைக் கூறுக.
15. நாவாய் ஓட்டிகளுக்குக் காற்று எவ்வாறு துணை செய்கிறது?

16. கலங்கரை விளக்கில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்?

17. நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக அகநானூறு கூறுகிறது?

IV. **எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 × 3 = 9

18. இலக்கிய வகைச் சொற்கள் எத்தனை வகைப்படும்?

19. கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?

20. சிறிய நீர்நிலைகளையும் கடல்களையும் கடக்கத் தமிழர்கள் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்களை எழுதுக.

21. கலங்கரை விளக்கம் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறும் கருத்துகளை எழுதுக.

V. **வினாக்களுக்கு ஏற்ப விடையளி.**

22. கோடிட்ட இடத்தை நிரப்புக. 3 × 1 = 3

அ) கப்பல் ஓரிடத்தில் நிலையாக நிற்க உதவுவது ________________

ஆ) கப்பல் கட்டுவதற்குப் பயன்படும் மர ஆணிகள் ________________

இ) இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள் ________________ எனக் குறிப்பிடப்படும்.

23. பொருத்துக. 6 × 1 = 6

| | | |
|---|---|---|
| அ) வங்கம் | - | திசை காட்டும் கருவி |
| ஆ) எல் | - | அடி மரம் |
| இ) எரா | - | குறுக்கு மரம் |
| ஈ) மீகாமன் | - | கப்பல் |
| உ) பருமல் | - | பகல் |
| ஊ) காந்த ஊசி | - | கப்பலைச் செலுத்துபவர் |

24. தொடரில் அமைத்து எழுதுக. 3 × 1 = 3

அ) நீரோட்டம் ஆ) ஏற்றுமதி இ) வானியல் அறிவு

25. பிழைகளைத் திருத்தி எழுதுக. 5 × 1 = 5

அ) ஏறிகளில் மலைநீர் சேமித்தான் கிணருகளில் நீர் வற்றாது.

ஆ) கொஞ்சம் வெண்னி வைத்துத் தந்தால் எண்ணை தேய்த்துக் கொல்வேன்.

இ) பேறுந்து நிருத்துமிடத்தின் பல்லிக்கூடம் இறுக்கிறது.

ஈ) ஆளமரத்தின் விளுதினைப் பாம்பென்று குறங்கு அஞ்சியது.

உ) இன்றும் நம் நாட்டிள் பெறுவாரியான மக்கள் உல்லார்களே.